தமிழ்நாடு அரசு

# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## பட்டு வளர்ச்சித்துறை

## மானியக் கோரிக்கை எண்.18

## செயலாக்கத்திட்டம்
## 2013 – 2014

# பட்டு வளர்ச்சித்துறை

# 2013–2014ஆம் ஆண்டிற்கான செயலாக்கத்திட்டம்

இந்திய அளவில் பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் கீழ்க்காணும் நான்கு முக்கிய செயல்பாடுகளில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது.

(அ). மாநிலத்தில், 100 பட்டு முட்டைத் தொகுதிகளுக்கான சராசரி பட்டுக்கூடு உற்பத்தி அளவு 71.5 கிலோ கிராம் ஆகும். ஆனால் தேசிய அளவில் சராசரி உற்பத்தி 60.0 கிலோ கிராம் மட்டும் ஆகும்.

(ஆ). மொத்த பட்டு முட்டை வளர்ப்பில், 32 சதவீதம் இளம்புழுக்களாக வளர்த்து விநியோகிக்கப்படுகிறது. இது தேசிய அளவில் அதிகப்பட்ச சாதனையாகும்.

(இ). தொகுப்பு அபிவிருத்தி திட்ட செயலாக்கத்தில் தேசிய அளவில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது.

(ஈ). மொத்த பட்டு உற்பத்தியில், 63.4 விழுக்காடு வெண்பட்டு ஆகும். இதில் தேசிய அளவில் தமிழகம் முன்னோடியாக திகழ்கிறது.

## (அ). 100 முட்டைத் தொகுதிகளுக்கு பட்டுக்கூடு அறுவடை

சமீப ஆண்டுகளாக 100 முட்டைத் தொகுதிகளுக்கு பட்டுக்கூடு உற்பத்தித் திறன் அதிகரித்து வருகிறது. இவ்வினத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வருடம் | 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை (கிலோ கிராம்) |
|---|---|---|
| 1 | 2009-2010 | 65.430 |
| 2 | 2010-2011 | 66.000 |
| 3 | 2011-2012 | 68.800 |
| 4 | 2012-2013 | 69.690 |
| 5 | 2013-2014 | 71.500 |

## (ஆ). இளம்புழு வளர்ப்பு மையங்கள்

விவசாயிகள் இளம்புழுக்களை பயன்படுத்துவதால் பட்டுபுழு வளர்ப்பு உற்பத்தி அதிகரித்து பட்டுப்புழு இழப்பு குறையும் என்ற கோட்பாடு நிருபணமாகிறது. விவசாயிகள், முட்டை தொகுதிகளிலிருந்து புழுவளர்ப்பதைத் தவிர்த்து இளம்புழு பருவத்திலிருந்து வளர்க்கும் முறையானது குறிப்பிடத் தகுந்த அளவு அதிகரித்துள்ளது.

இவ்வினத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வருடம் | மொத்த முட்டைகள் வளர்ப்பு (இலட்சத்தில்) | இளம்புழுக்களாக வளர்க்கப்பட்டது (இலட்சத்தில்) | விழுக்காடு (%) | இளம்புழு வளர்ப்பு மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 2009-2010 | 131.250 | 35.568 | 27 | 42 |
| 2 | 2010-2011 | 124.028 | 30.744 | 25 | 22 |
| 3 | 2011-2012 | 140.778 | 34.675 | 25 | 22 |
| 4 | 2012-2013 | 114.977 | 31.410 | 27 | 75 |
| 5 | 2013-2014 | 100.797 | 31.639 | 32 | 132 |

## (இ). தொகுப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொகுப்பு அணுகுமுறை

தமிழகத்தில் தொகுப்பு அபிவிருத்தித் திட்டம் எட்டு தொகுப்புகளில், 2008–2009 முதல் 2011–2012 வரை மத்திய பட்டு வாரிய உதவியுடன் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் விதை, பட்டுக்கூடு, பட்டு நூற்பு ஆகிய இனங்களை உள்ளடக்கி, “தொகுப்பு அணுகுமுறை” மூலம் பட்டு வளர்ச்சிப்பணிகள் செயல்படுத்தப்படுகிறது. 2013–2014 ஆம் ஆண்டில் 20 தொகுப்புகள் கூடுதலாக சேர்க்கப்பட்டு, மொத்தம் 28 தொகுப்புகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில், வெண்பட்டு முட்டை வளர்ப்பு, பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வெண்பட்டு உற்பத்தி ஆகிய அனைத்து இனங்களில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விபரம் கீழே பின்வருமாறு.

| வ. எண் | வருடம் | வளர்த்த முட்டைத் தொகுதிகள் (இலட்சத்தில்) | பட்டுக்கூடு உற்பத்தி (மெட்ரிக் டன்) | பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்) | 100 முட்டை தொகுதிகளுக்கு அறுவடை (கிலோ கிராமில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2009-2010 | 11.051 | 766.737 | 122.670 | 69.400 |
| 2 | 2010-2011 | 17.291 | 1,204.376 | 192.700 | 69.700 |
| 3 | 2011-2012 | 25.361 | 1,845.060 | 295.210 | 72.750 |
| 4 | 2012-2013 | 24.909 | 1,823.141 | 293.300 | 73.190 |
| 5 | 2013-2014 | 38.450 | 2,822.264 | 451.562 | 73.400 |

## (ஈ). கச்சாப்பட்டு உற்பத்தி

மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதில், தமிழக விவசாயிகள் முன்னோடியாகத் திகழ்கின்றனர். மாநிலத்தில் தரமான வெண்பட்டு உற்பத்தியைப் பெருக்க போதுமான தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவிகள் உரிய நேரத்தில் பட்டு வளர்ச்சித்துறை மூலமாக அளிக்கப்பட்டு வருகின்றன. மழையளவு குறைந்த போதிலும், வெண்பட்டு உற்பத்தி மற்றும் மொத்த பட்டு உற்பத்தியில் வெண்பட்டு விழுக்காடு **2013–2014** ஆம் ஆண்டில் குறிப்பிடத் தகுந்த அளவு அதிகரித்துள்ளது

இவ்வினத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வருடம் | மொத்த கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்) | வெண்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்) | வெண்பட்டு உற்பத்தி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | 2009-2010 | 1,233 | 350.80 | 28.5 |
| 2 | 2010-2011 | 1,182 | 414.00 | 35.0 |
| 3 | 2011-2012 | 1,418 | 592.20 | 41.7 |
| 4 | 2012-2013 | 1,185 | 575.50 | 48.6 |
| 5 | 2013-2014 | 1,120 | 710.63 | 63.4 |

பட்டு வளர்ச்சித்துறையின் முக்கிய செயல்பாடுகள் குறித்த சாதனை விபரங்கள் அட்டவணை எண்.1 முதல் 7 வரை பின்வருமாறு.

## 1. பட்டுக்கூடு உற்பத்தி

2013–2014 ஆம் ஆண்டில், **7,206** மெட்ரின் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வினத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வருடம் | உற்பத்தி (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| 1 | 2009-2010 | 8,588 |
| 2 | 2010-2011 | 8,157 |
| 3 | 2011-2012 | 9,685 |
| 4 | 2012-2013 | 8,013 |
| 5 | 2013-2014 | 7,206 |

## 2. அரசு பட்டுப் பண்ணைகள்

### அ) பண்ணை வருவாய்

கடந்த ஆண்டு சாதனையின் அடிப்படையில், அரசு பட்டுப் பண்ணைகளின் உள்ளமைப்பு மற்றும் நிலவும் உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை பொறுத்து, சில பண்ணைகள் விதைக்கூடு உற்பத்தி, மல்பரி நாற்று உற்பத்தி மற்றும் இளம்புழு வளர்த்து விநியோகித்தல் முதலான சேவைகளை பட்டு விவசாயிகளுக்கு செய்து வருகின்றன.

இவ்வினத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வருடம் | பண்ணை வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2009-2010 | 59.003 |
| 2 | 2010-2011 | 83.526 |
| 3 | 2011-2012 | 72.353 |
| 4 | 2012-2013 | 72.040 |
| 5 | 2013-2014 | 73.532 |

### ஆ) அரசு பட்டுப்பண்ணைகளில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி

2013–2014 ஆம் ஆண்டில், பட்டு வளர்ச்சித் துறையின் அரசு பட்டுப்பண்ணைகளில் **5,237** விவசாயிகளுக்கு பட்டு வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அரசு பட்டுப் பண்ணைகளில் மூன்று நாள் பயிற்சி மூலம், மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்றுவிக்கப்பட்டது.

இவ்வினத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வருடம் | பயிற்சி பெற்ற விவசாயிகள் |
|---|---|---|
| 1 | 2009-2010 | 3,631 |
| 2 | 2010-2011 | 5,530 |
| 3 | 2011-2012 | 5,794 |
| 4 | 2012-2013 | 5,430 |
| 5 | 2013-2014 | 5,237 |

## இ) அரசு பட்டுப்பண்ணைகளில் மல்பரி நாற்று உற்பத்தி

2013–2014 ஆம் ஆண்டில், பட்டு வளர்ச்சித் துறையின் அரசு பட்டுப்பண்ணைகளில் **35.410** இலட்சம் மல்பரி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட மல்பரி நாற்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு புது நடவிற்காக பயன்படுத்தப்பட்டது.

இவ்வினத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வருடம் | மல்பரி நாற்று உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2009-2010 | 1.780 |
| 2 | 2010-2011 | 1.832 |
| 3 | 2011-2012 | 37.552 |
| 4 | 2012-2013 | 36.540 |
| 5 | 2013-2014 | 35.410 |

## 3. ‘பட்டு வளர்ச்சி அபிவிருத்தி மற்றும் விலை உறுதிபடுத்தும் நிதி’யின் கீழ் தீர்வை (லெவி) வசூலித்தல்

விவசாயிகள் மற்றும் நூற்பாளர்களிடமிருந்து பெறப்பட்டு அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் வர்த்தகம் செய்யப்பட்ட பட்டுக்கூடுகளின் மதிப்பிலும், விற்பவர் மற்றும் வாங்குபவரிடமிருந்து வர்த்தகம் செய்யப்பட்ட பட்டுநூலின் மதிப்பிலும் தலா 0.75 விழுக்காடு தீர்வை (லெவி) வசூலிக்கப்பட்டு பட்டு வளர்ச்சி அபிவிருத்தி மற்றும் விலை உறுதிபடுத்தும் நிதியில் சேர்க்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட தீர்வை (லெவி) விபரம் பின்வருமாறு.

| வ எண் | வருடம் | தீர்வை (லெவி) வசூல் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2009-2010 | 159.480 |
| 2 | 2010-2011 | 213.437 |
| 3 | 2011-2012 | 157.134 |
| 4 | 2012-2013 | 173.204 |
| 5 | 2013-2014 | 143.323 |

## 4. பட்டுக்கூட்டுக்கு பிந்தைய நிலைப்பிரிவு

பட்டுக்கூட்டுக்கு பிந்தைய நிலைப்பிரிவை வலுப்படுத்த பல்வேறு தரப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் அதிக அளவில் புதிய பட்டு நூற்பு அலகுகளை கடந்த சில ஆண்டுகளில் மாநிலத்தில் நிறுவுவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் கிரியா ஊக்கித்திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட பட்டு நூற்பு அலகுகள் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | வருடம் | சர்க்கா / மின் மோட்டார் சர்க்கா | | காட்டேஜ் பேசின் அலகு | | பலமுனை நூற்பு அலகு | | தானியங்கி நூற்பு அலகு | | வெப்பக் காற்று உலர்த்தி | தறிகள் | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அலகு | ஏனங்கள் | அலகு | ஏனங்கள் | அலகு | ஏனங்கள் | அலகு | ஏனங்கள் | அலகு | எண்ணிக்கை | அலகு | ஏனங்கள் |
| **1** | **2009-2010** | - | - | - | - | - | - | 1 | 40 | 3 | 500 | **4** | **540** |
| **2** | **2010-2011** | - | - | - | - | 2 | 20 | - | - | 10 | 6000 | **12** | **6020** |
| **3** | **2011-2012** | - | - | - | - | - | - | - | - | 10 | 5300 | **10** | **5300** |
| **4** | **2012-2013** | - | - | 10 | 60 | 2 | 20 | - | - | 5 | - | **17** | **80** |
| **5** | **2013-2014** | - | - | - | - | 12 | 120 | - | - | - | - | **12** | **120** |

## 5. மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழக அரசால் வழங்கப்படும் நிதி

மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் மூலமாக கடந்த 5 ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விபரங்கள் பின்வருமாறு.

| வ. எண் | வருடம் | மத்திய பட்டு வாரியம் (ரூபாய் இலட்சத்தில்) | தமிழக அரசு (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| **1** | **2009-2010** | **829.544** | **574.570** | **1,404.114** |
| **2** | **2010-2011** | **2,234.940** | **1,154.229** | **3,389.169** |
| **3** | **2011-2012** | **1,229.485** | **773.876** | **2,003.361** |
| **4** | **2012-2013** | **1,371.500** | **797.480** | **2,168.980** |
| **5** | **2013-2014** | **1,642.639** | **895.123** | **2,537.762** |

## 6. தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஒசூர்

2013–2014 ஆம் ஆண்டில், தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஒசூரில் **2,130** விவசாயிகளுக்கு பட்டு வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வெண்பட்டுப்புழு வளர்ப்பு குறித்த ஐந்து நாட்கள் தீவிர பயிற்சி அளிக்கப்பட்டது.

இவ்வினத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வருடம் | பயிற்சி பெற்ற விவசாயிகள் |
|---|---|---|
| 1 | 2009-2010 | 1,417 |
| 2 | 2010-2011 | 1,981 |
| 3 | 2011-2012 | 2,039 |
| 4 | 2012-2013 | 2,173 |
| 5 | 2013-2014 | 2,130 |

## 7. தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்

கச்சாப்பட்டு மற்றும் முறுக்கேற்றிய பட்டு வர்த்தகம் செய்யப்பட்டதன் வாயிலாக, தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம், 2013–2014 ஆம் ஆண்டில், ரூ.73.80 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

இவ்வினத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வருடம் | கொள்முதல் | | விற்பனை | | நிகர இலாபம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| | | அளவு (மெட்ரிக் டன்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | அளவு (மெட்ரிக் டன்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | 2009-2010 | 432 | 7766.99 | 431 | 7811.73 | 34.34 |
| 2 | 2010-2011 | 391 | 9318.17 | 387 | 9300.05 | 26.50 |
| 3 | 2011-2012 | 300 | 6256.85 | 298 | 6300.38 | 44.46 |
| 4 | 2012-2013 | 248 | 6576.83 | 255 | 6726.61 | 70.49 |
| 5 | 2013-2014 | 270 | 9095.25 | 267 | 9012.22 | 73.80 |